வில்லை. இந்தத் தயாரிப்பு வேலைகள் எப்போது முடியும் என்பதையும், எப்போது தேர்தலை நடத்துவீர்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் அரசின் சார்பிலே அறிவிப்பார்களானால் நன்றியுள்ளவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 61/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 61/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஏ) கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

1986 நவம்பர் 18]

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" ஆளுநர் அவர்களால் 30-5-1986 ஆம் தேதியன்று பிறப் பிக்கப் பெற்ற 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1986) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண் டாம் திருத்த) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

" 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண் டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**14-11-1986 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த)
சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' ஆளுநர் அவர்களால் 19—7—1986 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1986) இப்பேரவை நிராகரிக்கிறது''.

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற, வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

**14—11—1986 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.